118) நபி (ஸல்) அவர்கள் தபூக்கிலிருந்து திரும்பி வந்த போது, போருக்குச் செல்லாமல் பின்தங்கிய மக்கள், நபியவர் களிடம் பல காரணங்களைக் கூறி மன்னிப்புக் கோரினார்கள். அவர்களில் 80க்கும் மேற்பட்ட நயவஞ்சகர்கள் இருந்தனர். மூன்று உண்மையான நம்பிக்கையாளர்களும் இருந்தனர். நயவஞ்சகர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பொய்யான சாக்குபோக்கைக் கூறினார்கள். நபியவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, அவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

இந்த மூன்று நம்பிக்கையாளர்களின் முறை வந்தது. இவர்கள் தெளிவாக தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இந்த மூவரின் விவகாரத்தை ஒத்திப்போட்டு விட்டார்கள். இவர்கள் விஷயத்தில் இறைவனுடைய தீர்ப்பு வரும்வரை, இவர்களுடன் யாரும் சமூக, குடும்ப ரீதியான தொடர்புகள் வைத்துக்கொள்ளக் கூடாது என்று முஸ்லிம் பொது மக்களுக்கு நபியவர்கள் கட்டளையிட்டார்கள்.

இவர்களின் விவகாரத்தில் ஒரு தீர்ப்பு வழங்கும் விதமாகவே இந்த வசனம் இறங்கியது. (இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய விஷயமாவது: இந்த மூன்று நபித்தோழர்களின் விவகாரம், அந்த ஏழு நபித்தோழர்களின் விவகாரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். அவர்களைக் குறித்த விவரம் அ.கு.99இல் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் நீதி விசாரணை நடக்கும் முன்பே தங்களுக்குத் தாங்களே தண்டனை கொடுத்துக் கொண்டார்கள்.)

119) இந்த மூன்று நபித்தோழர்கள் கஅபு பின் மாலிக் (ரலி), ஹிலால் பின் உமய்யா (ரலி), முராரா பின் ரபீஃ ஆகியவர் களாவர். நாம் இதற்கு முன்னர் கூறியதைப்போன்று, இம்மூவரும் உண்மையான நம்பிக்கையாளர்களாய் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தாங்கள் வாய்மையானவர்கள் என்பதை இதற்கு முன்னர் பலமுறை நிரூபித்துள்ளனர். பல தியாகங்களைச் செய்துள்ளனர். கூறப்பட்ட மூவரில் கடைசியாக இடம்பெறும் இருவரும், பத்ருப் போரில் கலந்து கொண்டவர்கள். அவர்களின் ஈமான் உண்மையானது என்பதில் யாரும் ஐயம் கொள்ள முடியாது. கண்ணியத்திற்குரிய முதலாம் தோழர் பத்ருப் போரில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அதைத் தவிர்த்து எல்லாப் போர்களிலும் நபியுடன் இருந்துள்ளார்.

தகுதியுடையவர்கள் உடனே போருக்குப் புறப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டபோது, அவர்கள் பல சேவைகள், தியாகங்கள் செய்திருந்தும்கூட, இந்த நெருக்கடியான நேரத்தில் சோம்பல் காட்டினார்கள். ஆகவே அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தபூக்கிலிருந்து திரும்பி வந்தவுடன் யாரும் இவர்களுக்கு சலாம் கூறக்கூடாது, பேசக் கூடாது என்று முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டார்கள். 40 நாட்களுக்குப் பின்பு, அவர்களிடமிருந்து தனித்திருக்க வேண்டும் என்று அவர்களின் மனைவியர்க்குக் கட்டளை இடப்பட்டது. உண்மையில் மதீனாவில் அவர்களுக்குப் பாதகமாக உருவான சூழலை இந்த வசனம் தெளிவாகக் காட்சிப்படுத்துகின்றது. இவ்வாறாக இவர்கள் 50 நாட்கள் சமூகப் புறக்கணிப்பு செய்யப் பட்ட பின்பு மன்னிக்கப்பட்டார்கள் என்ற தீர்ப்பு இறங்கியது.

இந்த மூன்று நபித்தோழர்களில், கஅபு பின் மாலிக் (ரலி) தமது வரலாற்றை மிகவும் விரிவாகக் கூறியுள்ளார்கள். அது மிகவும் உயர்ந்த படிப்பினைகளை உள்ளடக்கியுள்ளது. அவர் தமது கண்பார்வை இழந்து விட்ட வயதான காலகட்டத்தில், தமது கைகளைப் பற்றிப் பிடித்து அழைத்துச் செல்லும் தமது மகனார் அப்துல்லாஹ்விடம் இந்த நிகழ்வைத் தாமே விளக்கிக் கூறினார்:

தபூக் போருக்குச் செல்வதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டி ருந்தன. எப்போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு இந்தப் போரில் கலந்துகொள்ளும் படி அழைப்புக் கொடுத்தார்களோ, அப்போதெல்லாம் நானும் போருக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வேன் என்று என் மனதில் நினைப்பேன். ஆனால் சோம்பல் ஏற்பட்டுவிடும். ஆகவே என் மனதில் கூறிக்கொள்வேன். இப்போதே ஏன்? இன்னும் நாட்கள் இருக்கின்றன. அதற்கான நேரம் வந்த உடனேயே, தயாராகி விடலாம். அதற்கு எவ்வளவு நேரம் ஆகப்போகின்றது? என்று கூறிக் கொள்வேன். இவ்வாறாக நான் தயாராகின்ற இந்தக் காரியம் தாமதமாகிக் கொண்டே சென்றது. படைகள் புறப்படும் நேரமும் வந்துவிட்டது. நான் இன்னும் தயாராகவில்லை.

படைகள் புறப்பட்டுப் போகட்டும். ஓரிரு நாட்களில் வழியில் சென்று அவர்களுடன் இணைந்து கொள்ளலாம் என்று என் மனதில் கூறிக்கொண்டேன். பின்னர் அதே சோம்பல் என்னைப் புறப்படவிடாமல் தடுத்துவிட்டது. காலம் கடந்து விட்டது. இனி செல்ல இயலாது.

இந்தக் காலகட்டத்தில் நான் மதீனாவில் தங்கி இருந்தேன். நான் எந்த மக்களுடன் பின்தங்கி இருந்தேனோ அவர்கள் ஒன்று நயவஞ்சகர்களாக இருந்தனர் அல்லது போருக்குச் செல்லாமல் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அதாவது வயதானவர்களாக அல்லது ஏதோ நிர்பந்தத்திற்கு ஆளானவர் களாக இருந்தனர். இதைப் பார்க்கும் போது எனக்கு எரிச்சல் ஏற்பட்டது. என்னையே நான் நிந்தித்துக் கொண்டேன்.

நபி (ஸல்) அவர்கள் தபூக்கிலிருந்து திரும்பி வந்தவுடன், வழக்கப்படி முதலில் மஸ்ஜிதுக்கு வருகை தந்து இரண்டு ரக்அத் தொழுதார்கள். பின்னர் மக்களைச் சந்திப்பதற்காக அமர்ந்தார்கள். இந்த அவைக்கு நயவஞ்சகர்களும் வந்தனர். போருக்கு வராததற்குப் பல நொண்டி சாக்குபோக்குகளைச் சத்தியமிட்டு எடுத்து வைத்தார்கள். இவர்கள் 80க்கும் மேற்பட்டவர்கள். அவர்கள் புனைந்து கூறிய வெளிப்படையான காரணங்களை நபியவர்கள் செவியேற்ற பின்னர் ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் அகத்தில் மறைத்து வைத்திருப்பதை இறைவனிடம் விட்டு அவன் உங்களை மன்னிப்பான் என்று கூறினார்கள்.

பின்னர் எனது முறை வந்தது. நான் சற்று முன்னேறி நபியவர்களுக்கு முகமன் கூறினேன். என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து, வருக! உம்மைப் போருக்கு வராமல் எது தடுத்து நிறுத்தியது என்று வினவினார்கள்.

நான் கூறினேன்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உலக மக்களில் வேறு யாருக்கு முன்பாக ஆஜராகி இருந்தாலும் நிச்சயம் ஏதாவது ஒரு காரணத்தைப் புனைந்து அவரைத் திருப்திப்படுத்துவதற்கு முயற்சி செய்திருப்பேன். காரணங்களை எப்படித் தொகுப்பது என்பது எமக்கும் தெரியும். ஆனால் தங்களைப் பொறுத்த வரை நான் உறுதியாக நம்புகின்றேன்: இந்த நேரத்தில் ஏதாவது பொய்யான காரணத்தைச் சொல்லி தங்களைத் திருப்திப் படுத்திவிட்டால் பின்னர் தங்களை என் மீது நிச்சயம் அதிருப்தி அடையும்படி இறைவன் செய்து விடுவான் என்று நம்புகின்றேன்.

அதே சமயத்தில், தாங்கள் என் மீது அதிருப்திக் கொண்டாலும், நான் தங்களிடம் உண்மையைக் கூறிவிட்டால், நான் மன்னிக்கப்படுவதற்கு இறைவன் ஏதாவது ஒரு வழிவகை செய்தருள்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நான் போருக்குச் செல்லாததற்கு என்னிடம் எந்தக் காரணமும் இல்லை. இருந்தால்தானே நான் எடுத்து வைக்க. போருக்குச் செல்வதற்கு என்னிடம் சக்தி நிச்சயமாக இருந்தது.

இந்த மனிதர் உண்மையைக் கூறினார் என்று என்னைக் குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் என்னிடம், 'நல்லது! நீர் எழுவீராக! இறைவன் உம் விஷயத்தில் தீர்ப்பு கூறும் வரை காத்திருப்பீராக' என்று கூறிவிட்டார்கள்.

நான் எழுந்து, என் குல மக்களுடன் அமர்ந்து கொண்டேன். இங்கு எல்லோரும் என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். நீயும் ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறியிருக்க வேண்டியதுதானே! என்று என்னை நிந்தித்தார்கள். இதைக் கேட்டவுடன், திரும்பவும் சென்று ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிவிட்டுத் தப்பித்து வரலாமா என்று என் மனதில் சலனம் ஏற்பட்டது. ஆனால் முராரா பின் ரபீஃ, ஹிலால் பின் உமைய்யா என்ற இரண்டு நன்மக்களும் என்னைப்போன்றே உண்மையான காரணத்தைக் கூறியுள்ளனர் என்பது தெரிந்தவுடன் அமைதியானேன். உண்மையின் மீது நிலைத்திருக்க முற்பட்டேன்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் பொதுவான கட்டளை ஒன்றை அறிவித்தார்கள்: எங்கள் மூவருடன் யாரும் பேசக் கூடாது. மூவரில் மற்ற இருவரும் வீட்டிலேயே அமர்ந்து கொண்டனர். வெளியே வரவில்லை. நான் மட்டும் வெளியில் வந்தேன். ஜமாஅத் தொழுகையில் கலந்து கொண்டேன். கடைவீதிக்குச் சென்றேன். ஆனால் யாரும் என்னிடம் பேசவில்லை. இந்த பூமியே முற்றிலும் மாறிவிட்டிருந்தது. நான் அந்நிய ஊரில் இருப்பதைப் போன்று உணர்ந்தேன். நான் ஓர் அந்நியனானேன். என்னைத் தெரிந்தவர் யாரும் இந்த ஊரில் இல்லை என்பது போல் இருந்தது. மஸ்ஜிதுக்குச் சென்ற போதெல்லாம் வழக்கம்போல் நபி (ஸல்) அவர்களுக்கு சலாம் கூறினேன். அதற்குப் பதில்

சொல்வதற்காக அவர்களின் உதடுகள் அசையாதா என்று எதிர்பார்த்த வண்ணமிருந்தேன்.

தொழுகையில் இரகசியமாக நபியவர்களைப் பார்ப்பேன், அவர்களின் பார்வை என் மீது விழுகின்றதா என்று! ஆனால் நான் எதுவரையில் தொழுகையில் இருக்கின்றேனோ அதுவரை நபியவர்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நான் சலாம் கொடுத்த உடனேயே அவர்கள் தங்கள் பார்வையைத் திருப்பிக் கொள்வார்கள்.

ஒருநாள் மிகவும் கவலையோடு, பயத்தோடு, என் தந்தையின் சகோதரர் மகனும் என்னுடைய பால்ய நண்பருமான அபூ கதாதாவிடம் சென்றேன். அவருடைய தோட்டத்தில் மதில் ஏறி அவருக்கு சலாம் கூறினேன். அவரோ, இந்த சலாமுக்குப் பதில் கூட சொல்லவில்லை. நான் அவரிடம், அபூகதாதா! இறைவன் மீது சத்தியமிட்டு உன்னிடம் கேட்கின்றேன். நான் என்ன அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நேசிக்க வில்லையா? என்று கேட்டேன். அவர் பதில் கூறாமல் மௌனமாக இருந்தார். மீண்டும் கேட்டேன். அவர் மௌனமாக இருந்தார். மூன்றாவது முறை மீண்டும் சத்தியமிட்டு இந்தக் கேள்வியைக் கேட்டேன். அவர், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்துள்ளனர் என்று பதில் கூறியதோடு நிறுத்திக் கொண்டார்.

இதைக் கேட்டவுடன் என் கண்களில் கண்ணீர் மல்கியது. நான் சுவரிலிருந்து கீழே இறங்கினேன். இவ்வாறாக மற்றொரு முறை கடைத்தெருவில் சென்றுகொண்டிருந்தேன். சிரியா நாட்டைச் சேர்ந்த, நப்தி குலத்தவர்களில் ஒருவர் என்னைச் சந்தித்தார். கஸ்ஸான் நாட்டு மன்னன் எழுதிய கடிதம் ஒன்று பட்டாடையில் சுருட்டப்பட்டிருந்தது. அதை என்னிடம் அவர் கொடுத்தார். அதைத் திறந்து படித்தேன். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: ''நாம் கேள்விபட்டோம். உம்முடைய தோழர் உம்மீது கொடுமை புரிந்து விட்டார். நீர் ஒன்றும் இழிவானவர் அல்ல, உம்மை வீணடிப்பதற்கு! ஆகவே எங்களிடம் வந்து விடுவீராக. நாங்கள் உம்மை மதிக்கத் தயாராக இருக்கின்றோம்.'' நான் நினைத்தேன்: இதோ மற்றுமொரு சோதனை இறங்கிவிட்டதாக உணர்ந்தேன். அந்தக் கடிதத்தை அடுப்பில் எரித்து விட்டேன்.

40 நாட்கள் இந்த நிலையிலேயே கடந்து விட்டன. நபி (ஸல்) அவர்கள் அனுப்பிய ஒருவர் 'நான் என் மனைவியிடமிருந்து பிரிந்து விடவேண்டும்' என்ற கட்டளையுடன் வந்தார். தலாக் விட்டுவிடவா என்று கேட்டேன். இல்லை! தனித்து இருக்க வேண்டும் என்று பதில் வந்தது. நான் என் மனைவியிடம் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் தங்கிக் கொள்ளுங்கள். இறைவன் இந்த விவகாரத்தில் தீர்ப்பு அளிக்கும் வரை காத்திருங்கள் என்று கூறினேன்.

50ஆம் நாள் வைகறைத் தொழுகையை முடித்துக் கொண்ட பிறகு என் வீட்டின் மேல்தளத்தில் அமர்ந்திருந்தேன். எனக்கு என் உயிர் மீதே வெறுப்பு ஏற்பட்டுக்கொண்டிருந்தது. திடீரென்று ஒரு மனிதர் உரத்த குரலில் 'கஅபே! உமக்கு நற்செய்தி!' என்று கூறியவராக என்னிடம் வந்தார். நான் உடனே சஜ்தாவில் விழுந்தேன். எனக்கு மன்னிப்பு வந்து விட்டது. அதற்கான கட்டளை இறங்கிவிட்டது என்பதைப் புரிந்து கொண்டேன். பின்னர் மக்கள் கூட்டம் கூட்டமாக ஓடோடி என்னிடம் வந்தனர். நீர் பாவமன்னிப்புக் கோரியது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது என்று ஒவ்வொருவரும் மற்றவர்களை முந்திக்கொண்டு எனக்கு வாழ்த்து கூறினார்கள்.

நான் எழுந்தேன். மஸ்ஜிது நபவிக்கு விரைந்து சென்றேன். அங்கே நபி (ஸல்) அவர்களின் திருமுகம் மகிழ்ச்சியால் மின்னிக் கொண்டிருப்பதைக் கண்டேன். நான் சலாம் கூறினேன். என்னை நோக்கி நபியவர்கள் 'உமக்கு வாழ்த்துகள்! இந்த நாள் உம் வாழ்க்கையில் மிகவும் சிறந்த நாள்' என்று கூறினார்கள். இந்த மன்னிப்பு நபியவர்களின் தரப்பிலிருந்து அளிக்கப்பட்டிருக் கின்றதா அல்லது இறைவன் தரப்பிலிருந்தா என்று கேட்டேன். நபியவர்கள் இது இறைவன் புறத்திலிருந்து என்று கூறி இந்த வசனங்களை ஓதிக் காட்டினார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய தவ்பாவின் ஒரு பகுதியாக, நான் எனது எல்லாச் செல்வங்களையும் இறைவழியில் தர்மம் செய்து விடட்டுமா? என்றேன். இல்லை! சிறிதளவு செல்வத்தை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். அது உங்களுக்குச் சிறந்ததாகும் என்று நபியவர்கள் கூறினார்கள். இந்த

வழிகாட்டுதலின்படி கைபரில் இருக்கும் எனது சொத்தை வைத்துக்கொண்டேன். மீதியை தர்மம் செய்து விட்டேன்.

பின்னர், எந்த வாய்மையின் காரணமாக இறைவன் எனக்கு மன்னிப்பு வழங்கினானோ அதில் என்னுடைய வாழ்நாள் முழுவதும் நிலைத்திருப்பேன் என்று நான் அல்லாஹ்விடம் உடன்படிக்கை செய்துகொண்டேன். ஆகவே இன்றுவரை நான் வேண்டுமென்றே வாய்மைக்கு எதிராக எதையும் செய்யவில்லை. இனிவரும் காலங்களிலும் என்னை இறைவன் காப்பாற்று வானாக என்று கூறினார்.

இந்த நிகழ்வில் பல படிப்பினைகள் உள்ளன. ஒவ்வொரு நம்பிக்கையாளரும் அவற்றை நன்கு விளங்கிக் கொண்டு அவற்றை மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக, இறைநிராகரிப்புக்கும், இஸ்லாத்திற்கும் இடையில் நடைபெறும் போராட்டம் மிகவும் நுண்மையானது. ஆபத்தானது. முக்கியமான நடவடிக்கை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது நெருக்கடியான பதற்றமான தருணமும் கூட.

இந்தப் போராட்டத்தில் இறைநிராகரிப்புக்கு துணைபோவது ஒருபுறம் இருக்கட்டும், எவராவது ஒருவர் தீய எண்ணத்துடன் அல்ல நல்ல எண்ணத்துடன் வாழ்நாள் முழுவதும் அல்ல, வாழ்க்கையின் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இஸ்லாத்திற்கு துணைபோவதில் குறைவைத்தால் அல்லது இந்த விஷயத்தில் சற்றே சருகிவிட்டால் அவர் வாழ்க்கை முழுவதும் நிறைவேற்றிய வணக்க வழிபாடுகள், மார்க்கத்தின் அடிப்படையில் அவர் செய்த செயல்கள், தொண்டுகள் அனைத்துக்கும் பேராபத்து ஏற்பட்டு விடும். ஏன், இத்தனை உயர்ந்த மனிதர்கள்கூட இந்த தண்டனையிலிருந்து தப்பிக்க முடியவில்லை. அவர்களோ பத்ரு, உஹத், அஹ்ஸாப், ஹுனைன் போன்ற போர்களில் கலந்து கொண்டு தங்களின் தியாக உணர்வை, மன உறுதியை நிரூபித்துக் காட்டியவர்கள். அவர்களின் வாய்மையில், ஈமானில் கொஞ்சம்கூட சந்தேகப்பட முடியாது. அப்படியிருந்தும் தப்பிக்க முடியவில்லை.

முன்னர் குறிப்பிட்ட விஷயத்தை விட சிறிதும் முக்கியத்துவம் குன்றாத இரண்டாவது விஷயமாவது: கடமைகளை நிறைவேற்று வதில் கவனமில்லாமல் அசட்டையாக சோம்பலாக இருப்பது ஒரு சாதாரண விஷயமல்ல. மாறாக அது சில நேரங்களில் மனிதனைப் பெரும்பாவங்களில் சிக்க வைத்து விடும். பின்னர் நான் இதைத் தீய எண்ணத்தில் செய்யவில்லை என்று கூறி தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது.

பின்னர் இந்த நிகழ்வு நபி (ஸல்) அவர்களின் தலைமையில் உருவான அந்தச் சமூகம் எத்தனை உயிரோட்டமுள்ளதாக, சிந்தனைத் தெளிவுமிக்கதாக இருந்தது என்பதையும் நமக்கு அழகாக தெளிவுபடுத்துகின்றது.

ஒருபுறம் நயவஞ்சகர்கள் பொய்க் காரணங்கள், சாக்குபோக்கு களைத்தான் கூறினார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்து இருந்தது. ஆனால் அவர்கள் வெளியில் கூறிய காரணங்கள் செவியுறப்பட்டு அவர்கள் மன்னிக்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் வாய்மையாக இருப்பார்கள் என்று ஒருநாளும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவர்களிடம் வாய்மை இல்லை என்பதை யாரும் முறையிடவில்லை.

மறுபுறம் நன்கு வார்த்தெடுக்கப்பட்ட, பல சோதனைகளில் புடம்போடப்பட்ட, வாய்மையான நம்பிக்கையாளர் இருக் கின்றார். அவரின் உயிர்த் தியாக உணர்வின் மீது சிறிதும் ஐயம் கொள்ள முடியாது. அவர் பொய்யான எந்தக் காரணத்தையும் புனைந்து கூறவில்லை. தெளிவாக தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் மீது கோப மழை பொழிகின்றது. அவர் நம்பிக்கையாளர் என்பதில் சிறிது ஐயம் ஏற்பட்டுவிட்டது என்ற அடிப்படையில் இந்தக் கோப மழை பொழியவில்லை. மாறாக அவர் நம்பிக்கையாளராக இருந்தும்கூட, ஏன் நயவஞ்சகர்கள் செய்கின்ற வேலையைச் செய்தார் என்பதற்காகத் தான் இந்தக் கோபம் ஏற்பட்டது. கூறவிரும்புவதாவது: பூமியில் நன்மக்கள் நீங்கள்தான். உங்களிடமிருந்து நன்மை உதயமாக வில்லையெனில் வேறு எங்கிருந்து நன்மைகள் தோன்றும்!

பின்னர் இதில் இனியது என்னவென்றால், தலைமை கடுமையான தண்டனையைக் கண்ணியமான முறையில்,

கம்பீரத்தோடு அறிவிக்கின்றது. தலைமைக்குக் கட்டுப்பட்ட வர்கள் இதை மதிப்பச்சத்துடன் அனுபவிக்கின்றனர். முழு ஜமாஅத்தும் இதை உன்னதமான முறையில் நிறைவேற்று கின்றது. இதில் ஒவ்வொரு அம்சமும் ஒப்பற்றதாகும். வரலாற்றில் அரிதிலும் அரியதாகும். தலைமை, குற்றம் புரிந்தவர்கள், ஜமாஅத் இம்மூவரில் யாரை அதிகம் பாராட்டுவது என்று எளிதில் முடிவு செய்ய முடியாது.

தலைவர் மிகவும் கடுமையான தண்டனையைத் தருகின்றார். ஆனால் கோபத்தோடு, வெறுப்போடு அல்ல. மிகுந்த அன்போடு தருகின்றார். கோபமாக இருக்கின்ற தந்தையைப் போன்று தலைவர் நடந்துகொள்கின்றார். அவருடைய கண்களில் தீச்சுவாலை எரிகின்றது. ஆனால் அவரின் கடைக்கண் குற்றவாளியைப் பார்த்து, ''எனக்கு உன்மீது பகைமை ஒருபோதும் இல்லை. மாறாக உன்னுடைய குற்றத்தின் மீதுதான் எனக்குப் பகைமை. உன் நிலைமையைப் பார்த்து என் இதயம் வேதனை அடைகின்றது. நீ சரியாகிவிட்டால் உன்னை அணைத்துக் கொள்வதற்கு ஆவலாய் இருக்கின்றது' என்று கூறிக்கொண்டே இருந்தது.

தலைமைக்குக் கட்டுப்பட்டவர்களோ, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையின் கடினத்தைத் தாங்க முடியாமல் துடிதுடித்துப் போனார்கள். ஆனால் அவர்கள் ஒரு நாழிகைக் கூட தலைமைக்குக் கட்டுப்படுவதிலிருந்து விலகிடவில்லை. அதுமட்டுமல்ல, அவர்களுக்குக் கர்வம், ஆணவம், தற்பெருமை, அறியாமைக்கால வெறி எதுவும் ஏற்படவில்லை. அவர்கள் வெளிப்படையாக செருக்குடன் புரட்சியில் இறங்குவது ஒருபுறம் இருக்கட்டும், தங்களின் அன்புக்குரிய தலைமைக்கு எதிராக எந்த முறையீடும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக தலைமை மீது அவர்களுக்கு இருந்த அன்பு இன்னும் அதிகமானது.

தண்டனையை அனுபவித்துக்கொண்டிருந்த இந்த 50 நாட்களில் தலைவரின் கண்கள் நம்மை இனி திரும்பிப் பார்க்காதா என்று அவர்கள் மிகவும் ஆவலோடு ஏங்கினார்கள். ஏனெனில் மன்னிக்கப்படுவோம் என்ற எதிர்பார்ப்புக்கு அதுவே கடைசி ஆதாரமாக இருந்தது. வறட்சி, பஞ்சத்தில் அகப்பட்டுக் கொண்ட விவசாயி, வானத்தின் ஒரு மூலையில் மிகவும் சிறிய கருத்த மேகத்தைக் கண்டுவிட்டால், அவன் அதை மழைக்கான மூல ஆதாரமாக எண்ணுவதைப்போல!

பின்னர் அந்தச் சமூகக் கூட்டமைப்பைப் பாருங்கள்! அவர்களிடம் காணப்பட்ட ஒழுங்குமுறையான வாழ்க்கை, அவர்களிடம் காணப்பட்ட நற்பண்புகள், ஒழுக்கரீதியான உயிரோட்டம் போன்றவை மனிதனை மிகவும் வியக்க வைத்துவிடுகின்றன. அதிசயிக்க வைத்து விடுகின்றன. யாரும் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அவர்களின் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையைப் பாருங்கள்! குற்றவாளிகளை சமூகப் புறக்கணிப்பு செய்ய வேண்டும் என்று தலைவரிடமிருந்து கட்டளை வருகின்றது. உடனே ஜமாஅத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் பார்வை களைக் குற்றவாளியிடமிருந்து திருப்பிக் கொள்கின்றனர். பிறர் முன்னிலையில் அவர்களுடன் பேசுவது ஒருபுறம் இருக்கட்டும், தனிமையில்கூட அவர்களுடன் யாரும் பேசவில்லை. அவருடைய உற்றார் உறவினர்கள், உற்ற நண்பர்கள்கூட அவரிடம் பேசவில்லை. ஏன், மனைவியர்கூட அவரிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டனர்.

என்னுடைய வாய்மையில் ஏதாவது உங்களுக்கு ஐயம் இருக்கின்றதா என்று அவர் அந்த மக்களிடம் அல்லாஹ்வை சாட்சியாக வைத்துக் கேட்கின்றார். அவர் வாய்மையானவர்தான் என்பதை அந்த மக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பார்த்து வந்துள்ளனர். ஆனால் 'நீர் வாய்மையானவர் என்பதற்கு எங்களிடம் சான்றிதழ் கேட்க வேண்டாம். அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் கேட்பீராக' என்று தெளிவாகக் கூறுகின்றார்கள். இது ஒரு புறம்.

மறுபுறம் அவர்களின் ஒழுக்க மாண்புகள், உணர்வுகள் மிகவும் உயர்ந்தவையாக, தூய்மையானவையாக இருந்தன. உயர்ந்த மனிதர் ஒருவர் இறைக்கருணையிலிருந்து வீழ்ந்து விடுகின்றபோது, அவர்களில் யாரும் அவரைத் தூற்றவில்லை. பழிக்கவில்லை. அவரைக் குறித்துப் புறம்பேசவில்லை. மாறாக இந்தத் தண்டனைக்கால சமயத்தில் இந்த ஜமாஅத்தில் இருக்கும்

ஒவ்வொருவரும் தண்டனைக்குள்ளான சகோதரரின் துன்பத்தைப் பார்த்து வேதனை அடைந்தனர். அவரை மீண்டும் வாரி அணைக்க மிகவும் ஆவலோடு காத்திருந்தனர். அவர் மன்னிக்கப்பட்டுவிட்டார் என்ற அறிவிப்பு வந்த உடன் அவர்கள் ஓடோடிச் சென்று அவரைச் சந்தித்தனர். வாழ்த்துக் கூறினர்.

ஓர் உன்னதமான ஒப்பற்ற ஆரோக்கியமான ஜமாஅத்திற்கு இவர்கள் முன்மாதிரிகள். இப்படிப்பட்ட ஒரு ஜமாஅத்தைத்தான் திருமறை உருவாக்க விரும்புகின்றது.

இந்தப் பின்னணியில், நாம் ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட இந்த வசனத்தைப் பார்க்கும்போது பின்வரும் விஷயங்கள் தெளிவாகின்றன:

இந்தத் தோழர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பு கிடைத்தது. அந்த மன்னிப்பு வழங்கப்பட்ட விதத்தில் கருணை, பரிவு இருந்தது. அதற்கு முக்கியமான காரணம் அவர்களிட மிருந்த வாய்மை. ஆம்! இந்த 50 நாட்களில் கடுமையான தண்டனையை அனுபவிக்கும் போது அவர்கள் தங்கள் வாய்மையை நிரூபித்தார்கள்.

இதற்கு மாற்றமாக அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள் ளாமல், கோபத்துடன் வெகுண்டெழுந்து இருந்தால் அல்லது தலைமையின் அதிருப்திக்குப் பதில், கோபம் மற்றும் முரண் படுவதன் மூலம் கொடுத்திருந்தால் அல்லது ஓர் உலகாயத வாதியைப் போன்று, தமக்கு தண்டனை கிடைத்த உடனேயே செருக்கோடு கர்வத்தோடு அலைந்திருந்தால் அல்லது சமூகப் புறக்கணிப்பு காலகட்டத்தில், நாங்கள் ஜமாஅத்திலிருந்து விலகி இருக்கத் தயார், ஆனால் எங்கள் உள்ளே இருக்கும் 'நான்' என்ற சிலையின் மீது அடிவிழுவதைச் சகித்துக்கொள்ளத் தயாரில்லை என்ற நிலைப்பாடு அவர்களிடம் இருந்திருந்தால், அல்லது அவர்கள் இந்த தண்டனைக்கால கட்டத்தில் ஜமாஅத்தின் உள்ளே தீய எண்ணங்களைப் பரப்புவதற்கும், தீயவர்கள் அனைவரை யும் தேடிப்பிடித்து ஒன்றிணைத்து ஒரு அடியாள்கள் கும்பலை உருவாக்குவதற்கு முற்பட்டிருந்தால், பின்னர் அவர்களுக்கு ஒருபோதும் மன்னிப்பு கிடைக்காது. அதுமட்டுமல்ல அவர்கள் ஜமாஅத்திலிருந்து துண்டிக்கப்பட்டு வெளியில் தூக்கி எறியப்பட்டிருப்பார்கள்.

அது மட்டுமல்ல, இந்தத் தண்டனைக்குப் பின்னால் அவர்களுக்கு வேறொரு தண்டனையும் வழங்கப்பட்டிருக்கும். அதாவது சென்றுவிடுங்கள்! உங்களின் உள்ளே இருக்கும் 'நான்' என்ற சிலையை நீங்கள் பூசை செய்யுங்கள். சத்தியத்தின் குரலை ஓங்கச் செய்கின்ற உழைப்பில் பங்கு கொள்ள முடியாது. அந்த நற்பேறு இனி உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்ற தண்டனையும் தரப்பட்டிருக்கும்.

ஆனால் இந்த மூன்று தோழர்களும் இந்தக் கடினமான சோதனைக் காலத்தில், இந்தத் தவறான வழியைத் தேர்ந்தெடுப்ப தற்கு எல்லா வாய்ப்புகளும் இருந்தும்கூட, அதை அவர்கள் ஒருபோதும் தேர்ந்தெடுக்கவில்லை. அதற்கு மாற்றமாக அவர்கள் நேரான வழிமுறையைத் தேர்வு செய்தார்கள். அதை நீங்களே பார்த்துக்கொண்டு வருகின்றீர்கள்.

அவர்கள் இந்த நேரான வழிமுறையைத் தேர்வு செய்து, 'எங்களிடம் இறைப்பற்று மட்டுமே உள்ளது. எங்கள் இதயங்களில் எந்தச் சிலையையும் நாங்கள் பூஜிக்கவில்லை. இறைப்பற்று அவற்றைத் தூக்கி எறிந்து விட்டது. எங்களுடைய அனைத்து ஆளுமைகளையும் ஆற்றல்களையும் இறைவழியில் முயன்றுழைப்பதற்கு அர்ப்பணித்து விட்டோம்' என்பதை நிரூபித்துவிட்டார்கள்.

அவர்கள் எந்தக் கப்பலில் பயணம் செய்து இஸ்லாமியக் கூட்டமைப்புக்குள் நுழைந்தார்களோ, அந்தக் கப்பலை அவர்கள் எரித்து விட்டார்கள். ஏனெனில் இனி இங்கிருந்து திரும்பி வேறெங்கும் செல்லக் கூடாது என்பதற்காக! நாங்கள் இங்கு உதை வாங்க தயாராக இருக்கின்றோம். இங்கே இடறி விழத் தயார். எங்களை இந்தச் சமுதாயம் எப்படி வேண்டுமானாலும் நடத்தட்டும். இங்கேயே மரணிப்பதற்குத் தயார். எங்களுக்கு இங்கு இழிவே கிடைத்தாலும் அதை விட்டுவிட்டு, அந்நியர் களிடம் கிடைக்கும் மதிப்பு மரியாதையைப் பெற்றுக்கொள் வதற்காக ஒருபோதும் செல்ல மாட்டோம். இப்படிப்பட்ட மக்களை வாரி அணைத்துக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது?

இதன் காரணமாகத்தான் இறைவன் தனது மன்னிப்பு அறிவிப்பை மிகவும் கருணை, பரிவு மிக்க சொற்களால் இவ்வாறு வடித்துள்ளான். அதாவது 'நாம் அவர்களின் பக்கம்

கருணையுடன் திரும்பினோம்; அவர்கள் நம் பக்கம் தவ்பாவின் மூலம் திரும்பி வரவேண்டும் என்பதற்காக''.

இந்தச் சில சொற்களால், அவர்களின் நிலை இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது எஜமானன் முதலில் இந்த அடியார்களிடமிருந்து தனது பார்வையைத் திருப்பிக் கொண்டான்; ஆனால் அவர்கள் விரண்டு ஓடிடவில்லை. மாறாக மனம் உடைந்து அவனுடைய வாசலில் வந்து அமர்ந்து கொண்டனர். அவர்களின் நேர்மை, வாய்மை, நம்பிக்கையின் உன்னத நிலையைப் பார்த்த எஜமானன், அவர்கள் தன் மீது மிகுதியாக வைத்திருந்த அன்பைப் பார்த்த எஜமானன், இன்னும் தாமதிக்காமல் அவனே வந்து அவர்களை வாசலிலிருந்தே தூக்கிக் கொண்டான்.